## 1. தலைப்பு 185– தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு

---

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (ஈ) வரையிலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,000,780,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 963,252,683 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 37,527,317 தொகை அதாவது 4 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவு | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 113,800,000 | 102,161,088 | 11,638,912 | 10 |
| மூலதனம் | 886,980,000 | 861,091,595 | 25,888,405 | 2.9 |
| மொத்தம் | 1,000,780,000 | 963,252,683 | 37,527,317 | 4 |

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* 04 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,050,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

* 23 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 6 சதவீதம் தொடக்கம் 94 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

* அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேவையான திட்டமிடல்களைச் செய்து அதன்மூலம் தேவைகளை இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படாமல் எழுமாறான அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையின் காரணமாக 10 செலவின விடயங்களில் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 213,821,948 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் 04 செலவின விடயங்களுக்கு ரூபா 457,500,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 18501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| விடய இலக்கம் | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 18501 | 2,800,000 | 1,298,636 | 400,000 | 750,812 | 7,000,000 | 4,036,658 |

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

----------------------------------------

அமைச்சில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0000/00/0419/0013/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 39,110,354 ஆக இருந்தது. 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் அமைச்சு தீர்த்துவைத்திராத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,032,040 ஆக இருந்தது. இந்த மீதி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக செய்த 03 நிர்மாணங்களுக்குரிய மூன்று ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் இடைக்காலக் கொடுப்பனவாகும்.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

---------------------------------------------

அமைச்சில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6000/0000/00/0015/0187/0000 ஆம் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 39,032,040 ஆக இருந்தது. தேசத்திற்கு மகுடம் கண்காட்சிச் செயற்பாடுகளுக்காக மூன்று ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 39,032,040 தொகையான முற்பணம், செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டமையினால் இந்த மீதி ஏற்பட்டிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 யூன் 13 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது அமைச்சின் சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் 2013 செப்தெம்பர் வரை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் அது ஒக்தோபர் மாதத்தின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டிற்காக போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 04 வாகனங்களை கையேற்காமல் அமைச்சினால் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது. தற்போது அதில் ஒரு வாகனம் அகற்றக்கூடிய நிலையில் காணப்பட்டது.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 131,461,871 ஆக இருந்ததுடன் அப்பொறுப்புக்கள் ஒரு வருட காலத்திற்குக் குறைவாக இருந்தது.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் - 1645 | 06 குழாம் வாகனங்களுக்கான ஓட்டக்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) சனாதிபதிச் செயலகத்தின் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தி | அமைச்சர்களின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்ற ஆகக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும் இந்த அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சருக்கு 04 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக 06 குழாம் வாகனத்துடன் மேலும் ஒரு வாகனமும் உரிய அமைச்சரினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. |

## 1.7 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திட்டமிடல்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கியிருக்கவில்லை.

(i) கணக்காய்விற்காக வழங்கப்பட்ட மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 328 இ- வடிவமைப்புக் கூடத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு இ-வடிவமைப்புக் கூடத்திற்காக கணனி மற்றும் உபபாகங்களுடன் கட்டிடமொன்றை வழங்குவதற்கு ரூபா 4.2 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபா 1,377.6 மில்லியனாக இருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை அல்லது ஒரு இ-வடிவமைப்புக் கூடத்திற்காக செலவாகின்ற தொகை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்காக இந்த வடிவமைப்புக் கூடத்தை நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 395 மில்லியானாக இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது இ - வடிவமைப்புக்கூட நிர்மாணத்தின் செயல்முன்னேற்றம் 29 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கு அடையப்பட்டிராததுடன் அது வினைத்திறனான கருவியாகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த நிர்மாணங்களை 2014 ஆம் ஆண்டின் போது முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு மீளத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2014 யூன் 06 ஆந் திகதி வரையில் 130 இ - வடிவமைப்புக் கூடம் திறக்கப்பட்டிருந்தமையும் மேலும் 95 வடிவமைப்புக் கூடம் திறப்பதற்கு இருந்தமையும் 106 வடிவமைப்புக் கூடம் பூர்த்தி செய்வதற்கு இருந்தமையும் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 1.8 சர்ச்சைக்குரிய கெடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சிற்றுண்டிச்சாலை நிர்மாணிப்பதற்கான கூறுவிலைகளுக்கிடையே ஆகக் குறைந்த விலையாக ரூபா 11,135,250 படி 02 நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. நிராகரிப்பதற்கு விஷேட காரணங்கள் காண்பிக்கப்படாது அந்த கூறுவிலைகள் நிராகரிக்கப்பட்டு அடுத்த ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருக்கு ரூபா 12,066,600 தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(அ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சிப் பிரதேசத்தில் தற்காலிக மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கு கேள்வி கோரப்பட்டிருந்தது. ஒரு முறைமை ரூபா 575,000 படி 49 முறைமைகள் குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு நிர்மாணிப்பதற்கு கேள்வி சமர்ப்பித்திருந்த மூன்று கேள்விதாரர்களுக்கு அந்த ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டுமென மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்திருந்தது. அதற்கு முரணாக நிர்மாண நடவடிக்கைகள் குறிப்பிட்ட திகதியில் பூர்த்தி செய்வதற்கு இணங்கியிருக்காத கேள்விதாரரின் கேள்வி மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தும் தேசத்திற்கு மகுடம் பிரதான பதவிநிலை உத்தியோகத்தரினால் 2013 சனவரி 07 ஆந் திகதி

அந்த நிராகரித்த கேள்விதாரருக்கு ஒரு முறைமை ரூபா 575,000 படி பூர்த்தி செய்வதற்கு அந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) இணங்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்படாமையினால் வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2013 மார்ச் 08 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அது வரையில் அந்த ஒப்பந்தக்காரருக்கு ரூபா 15,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரினால் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் பூர்த்திசெய்யப்படாத 23 மலசலகூட முறைமைகளின் வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு அம்பாறை நகர சபைக்கு கையளித்து அதற்காக ரூபா 1,900,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கொள்வனவு நடைமுறைகளில் ஏற்பட்ட நலிவுகளின் காரணமாக எதிர்பார்த்த மலசலகூட முறைமைகளில் 26 நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட முறைமைக்காக ரூபா 3,675,000 தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2013 இன் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியின் நிர்மாணத்திற்கான வேலை ஆரம்பித்தல் முற்பணத் தொகைக்கு மேலதிகமாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 30,296,373 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அளவிடை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் நிதிப் பிரமாணம் 237(அ) இற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டமையினால் உரிய கொடுப்பனவுகளின் சரியான தன்மையினை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

(உ) வாசிப்பு மண்டபத்தை நிர்மாணிக்கும் போது அந்தக் கட்டிடத்தின் கதவுகள் மற்றும் யன்னல்கள் அலுமினியம் பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரர்களின் அளவிடைப்பத்திரங்களின் பிரகாரம் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 1,185,500 பெறுமதியான மரத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட லுவர்ஸ் கதவுகள் மற்றும் கதவு நிலைகள் கொழும்பிற்கு அண்மித்த பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------

கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமை

-----------------------------------------------------------------------------------------------------------------

2013 இன் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சிக்காக தற்காலிக மலசலகூடம், சிற்றுண்டிச்சாலை மற்றும் வாசிப்பு மண்டபம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 32,458,041 , ரூபா 12,066,600 மற்றும் ரூபா 18,678,330 ஆக கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்தக்

கொள்வனவுகள் தொடர்பாக அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

(அ) தகைமைகளுடன் ஆர்வத்தைக் காண்பிக்கின்ற சகல தரப்பினர்களுக்கும் பொதுவான மற்றும் சமமான சந்தர்ப்பங்களை ஆகக்கூடிய வகையில் வழங்கும் வகையில் 1.2.1(சீ) வழிகாட்டிக்கு முரணாக வேலைகளுக்காக திறந்த கூறுவிலை கோரப்படாமல் 4 நிறுவனங்களிலிருந்து மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. இதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் சிறந்த தரத்திலான நிர்மாணச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 5.2.1 வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கோரல் பதிவேட்டில் அளவிடைப் பட்டியல்கள் உள்ளடக்கப்படுதல் முக்கிய விடயமாக இருந்த போதிலும் சிற்றுண்டிச்சாலை மற்றும் வாசிப்பு மண்டபத்தை நிர்மாணிப்பதற்கான கேள்விகோரலின் போது அவ்வாறான அளவிடைப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 5.3.5 வழிகாட்டியின் பிரகாரம் நிமாணிப்பிற்கான மூன்று ஒப்பந்தக்காரர்கள் ஐ.சீ.ரீ.ஏ.டீ (ICTAD) இல் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களா என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாசிப்பு மண்டப நிர்மாண வேலைகளுக்காக கூறுவிலை சமர்ப்பித்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 5.3.11 வழிகாட்டியின் பிரகாரம் கேள்விப் பிணைக்காப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) 5.4.4(1) வழிகாட்டியின் பிரகாரம் பிணைக்காப்பு சமர்ப்பித்தலின் அடிப்படையில் ஒப்பந்தத் தொகையில் ஆகக்கூடியது 20 சதவீதம் முற்பணம் செலுத்த முடியுமான போதிலும் மேற்கூறப்பட்ட 03 நிர்மாணங்களுக்கான முற்பணம் செலுத்தும் போது அவ்வாறான பிணைக்காப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சிற்றுண்டிச்சாலை மற்றும் மலசலகூட நிர்மாண வேலைகளின் போது 5.4.8 வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை.

(எ) வாசிப்பு மண்டபம் மற்றும் சிற்றுண்டிச்சாலை நிர்மாணங்களின் போது 8.1 வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சு பெறப்பட்டிருக்கவில்லை.

## 1.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 09 | 08 | 01 |
| மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| இரண்டாம் நிலை | 33 | 13 | 20 |
| ஆரம்ப நிலை | 20 | 15 | 05 |
| ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | 01 | 01 | - |
| மொத்தம் | 67 | 40 | 27 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 27 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.